பொதுசன நூலகம்,
யாழ்ப்பாணம்
இந்துசாதன நூலகம்.

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 05 வெள்ளிக்கிழமை (20-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர்: 24

16 சிங்கள மீனவர் புலிகளால் விடுவிப்பு!

மனிதாபிமான நடவடிக்கையாக

யாழ்ப்பாணம், டிசம்பர் 20

விடுதலைப் புலிகளிடம் கைதிகளாக இருந்த 16 சிங்கள மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழீழ தேசியத் தலைவர் மனிதாபிமான அடிப்படையில் இவர்களை விடுதலை செய்தார் என்று "புலிகளின் குரல்" வானொலி நேற்றுத் தெரிவித்தது.

மாங்குளத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்ட இவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று மேலும் அறிவிக்கப்பட்டது.

தாம் ஆசையாக வளர்த்த நாயையும் அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றனர் என்றும் —

தம்மை விடுதலை செய்த தேசியத் தலைவருக்கும், கடற் புலிகளுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்தனர் என்றும் 'புலிகளின் குரல்' வானொலி மேலும் தெரிவித்தது.

அவர்களில் பலர் திருகோணமலை, ராகம, மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். (இ-3)

புளுக்குனாவ தாக்குதலின் போது புலிகள் தரப்பில் 26 பேர் சாவு!

மாங்குளம், டிச. 20

கடந்த 11 ஆம் திகதி மகாஓயா வீதியில் 19 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்திருந்த (புளுக்குனாவ) விசேட அதிரடிப் படை முகாம் மீது தாங்கள் நடத்திய தாக்குதலில் தங்களது தரப்பில் 26 பேர் வீரச்சாவடைந்ததாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர். அவர்களின் விவரம் வருமாறு:-

வீரவேங்கைகள் ரவி
(7 ஆம் பக்கம் பார்க்க)

'பாடும் மீன்' ராணுவ நடவடிக்கை கிழக்கில் பூர்த்தி அடைந்தது!

படையினர் பழைய இடம் திரும்பினர்

மட்டக்களப்பு, டிச. 20

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கே வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவு பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த 12 ஆம் திகதி முதல் படையினர் மேற்கொண்ட "பாடும்மீன்" இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையின் போது 3ஆம் கட்டை, பாவற்கொடிச்சேனை, முதலைக்குடா கிறிஸ்தவ தேவாலயம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களை மூடிக்கொண்டு படையினர் நகருக்குள் திரும்பி வந்தனர்.

படையினர் வாபஸ் பெற்றதையடுத்து புலிகள் மேற்படி பிரதேசங்களில் மீண்டும் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இந்த நடவடிக்கைக்காக வவுனியா, பதுளை ஆகிய இடங்களில் இருந்துகொண்டு வரப்பட்ட மேலதிக துருப்பினர் உடனடியாகவே தமது இடங்களுக்குத் திரும்பினர்.

இதேவேளை —

"பாடும் மீன்" நடவடிக்
(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

அப்ப ஊழலின் மறுவடிவம் காங்கிரஸ் என்டு சொல்லுங்கோ!

யுத்தம் தொடர்பான செய்திகள் சரியான முறையில் தரப்படுவதில்லை

பத்திரிகையாளர் மாநாட்டில் போர்க்கொடி

கொழும்பு, டிச. 20

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடக்கும் பத்திரிகையாளர் மாநாடு நேற்று நீண்ட நாள்களின் பின்னர் நடைபெற்ற சமயம், யுத்தம் தொடர்பான தகவல்கள் தமக்கு சரியான விதத்தில் தரப்படுவதில்லை என்று செய்தியாளர்கள் பலரும் குறை கூறினர்.

களுவாஞ்சிக்குடியில் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி உபாலி சஹபந்து கொல்லப்பட்ட சம்பவத்தை நடவடிக்கைத் தலைமையகம் 20 மணித்தியாலங்கள் தாமதித்தே உத்தியோகபூர்வமாக வெளியிட்டது என்று இவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதில் அளித்த இராணுவப் பேச்சாளர், பிரிகேடியர் திஸ்ஸஜெயதுங்கா உரிய தகவல்கள் கிடைக்கப்பெறும் வரை சம்பவங்களை வெளியிட முடியாது என்று கூறினார்.

எனினும் பிரிகேடியரின் விளக்கம் செய்தியாளருக்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை.

நடவடிக்கைத் தலைமையகத்தின் தகவல் பிரிவில் ஏதோ ஒரு தொய்வு நிலை இருப்பதாகவே அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

களுவாஞ்சிக்குடியில்

தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது எப்படி?

கொழும்பு, டிச. 20

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலின்போது விசேட அதிரடிப் படையின் பிரதிக்கட்டளை அதிகாரியான சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரிண்டென்ட் உபாலி சஹபந்து கொல்லப்பட்டார் அல்லவா?

அவர் எப்படிக் கொல்லப்பட்டார் என்ற தகவல் தற்பொழுது வெளியாகியுள்ளது.

கிழக்கில் இடம்பெற்ற 'பாடும் மீன்' ராணுவநடவடிக்கையில் பிரதிதளபதியான உபாலி சஹபந்து களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனையில் உள்ள தலைமையகத்துக்குத் திரும்பும்போது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பஜ்ரோ ஜீப்பில் அவரும் அவரது சாரதியும் பயணம் செய்ய பாதுகாப்புக்காக முன்னே படை வீரர்களைக்
(8ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியை ராவ் துறந்தார்!

இன்று புதிய தலைவர் தெரிவு

புதுடில்லி, டிச. 20

இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நரசிம்மராவ் நேற்று ராஜினாமாச் செய்தார்.

கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி கேட்டுக் கொண்டபடி தான் பதவி விலகுவதாக நரசிம்மராவ் தனது ராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார். இரண்டு வசனங்களில் இவரது இராஜினாமாக் கடிதம் அமைந்திருந்தது.

நரசிம்மராவைப் பதவி விலக்க நடவடிக்கை எடுக்கும்படி சீதாராம் கேசரிக்கு காங்கிரஸ் கட்சியின் செயற்குழு காரியக் கமிட்டி நேற்று அதிகாரம் அளித்திருந்தது.

நரசிம்மராவைப் பதவி விலகுமாறு கோரி சீதாராம் கேசரி அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அவர் தாமாகவே பதவி விலகுவதற்கு நேற்று மாலை 4.00 மணி வரை அவகாசமும் வழங்கியிருந்தார்-

அந்த காலக்கெடு முடிவதற்குள் நரசிம்மராவ் தமது பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்தார்.

இதனை அடுத்து புதிய தலைவரைத் தெரிவு செய்வ
(8ஆம் பக்கம் பார்க்க)

சீதாராம் கேசரி மீதும் ஊழல் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 20

காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி மீதும் ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தி வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்ட விரோதமான முறையில் இவர் பெரும் செல்வம் சேர்த்ததாகக் குற்றஞ்சாட்டி டில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுமீது மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கேசரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவரது வழக்கறிஞர் மறுத்துள்ளார். (இ-10)

சென்னைச் சிறையில் வைத்து ஜெயலலிதா விசாரிக்கப்பட்டார்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை குற்றப் புலனாய்வுப்பிரிவினர் நேற்று சென்னை மத்திய சிறைச்சாலையில் வைத்து விசாரித்தனர்.

சிறைச் சாலைக் கண்காணிப்பாளர் முன்னிலையில் நேற்றுக் காலை 10. 30 மணிக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஜெயலலிதாவும் சசிகலாவும் பங்காளிகளாகவுள்ள "ஜெயா பப்ளிகேசன்" என்ற நிறுவனத்துக்கும் "சசி என்ரபிறைஸ்" என்ற நிறுவனத்துக்கும் மாநில அரசு நிறுவனமான ரான்சிக்குச் சொந்தமான நிலங்களை வாங்கியது தொடர்பான இரண்டு வழக்குகள் சம்பந்தமாக இந்த விசாரணைகள் நடைபெற்றன. (இ- 10)

உணவு நச்சுத்தன்மை: அமைச்சர் சுகவீனம்

கொழும்பு, டிச. 20

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்ன கொழும்பில் தனியார் மருத்துவ மனை ஒன்றில் சேர்க்கப் பட்டுள்ளார்.

அவர் உட்கொண்ட உணவில் நச்சுத்தன்மை ஏற்பட்டது காரணமாக அவர் சுகவீனமுற்றதாகத் தெரிவிக்கப் பட்டது.

ஒருவார காலத்துக்கு அவர் எந்தவித பொது வைபவங்களிலும் கலந்துகொள்ள மாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. [இ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

பரமு முருகேசபிள்ளை

சாவகச்சேரி, பெரியமாவடியைச் சேர்ந்தவரான சாவகச்சேரி டிறிபேக்கல் ஸ்ரோரியின் இளைப்பாறிய ஆசிரியர் பரமு முருகேசபிள்ளை அவர்கள் 9 - 12 - 96 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியை சரஸ்வதிப் பிள்ளையின் கணவரும், சிவசாரதா [கொழும்பு], சிவபாலன் [நோர்வே], பாலகணேசன் [கனடா,] சிவபரன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரி, தியாகராசபிள்ளை (சாவகச்சேரி), ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் (மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வவுனியாவில் இடம் பெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. தியாகராசபிள்ளை
(சகோதரன்)

பெரியமாவடி,
சாவகச்சேரி.
(சி/ 3767)

விசுவநாதர் கந்தையா

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பாதுகாப்பு அமைச்சு, கொழும்பு)

மூளாயைச் சேர்ந்த விசுவநாதர் கந்தையா 14-12-96 அன்று மல்லாவியில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற விசுவநாதர் முத்தாச்சிப் பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை குஞ்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகாம்பிகை (உதவித் திட்டமிடல் பணிப் பாளர், பிரதேச செயலகம், சங்கானை), பத்மராணி (உதவி வைத்திய உத்தியோகத்தர், அரசினர் வைத்திய சாலை, மல்லாவி) ஜெயராணி (உதவிக் கணக்காளர், லண்டன்), ஞானாம்பிகை, இந்திராணி (ஆசிரியை, யா/ பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை, சித்தன் கேணி) ஆகியோரின் பாசமிகு அருமைத் தந்தையும், கயிலாயநாதன் (வைத்திய கலாநிதி, பிரதேச சபை, சங்கானை) காலஞ்சென்ற ஏகாம்பரமூர்த்தி (முன்னாள் அதிபர், யா/ விக்கினேஸ்வரா வித்தியாசாலை, தொல்புரம்) மனோகரன் குமாரசாமி (பாரிஸ்ரர், லண்டன்) தனராஜ் (தொழில் நுட்பவியலாளர், கொழும்பு), முருகதாசன் (பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற முருகேசம்பிள்ளையின் (மலாயன் பென்ஷனியர்) அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற பாலசிங்கத்தின் (முன்னாள் உதவிப்பணிப் பாளர், மீன்பிடி அமைச்சு) அன்பு மைத்துனரும், பிரியதர்சினி, சுகந்தினி, பூலோகசுந்தரம், நிரஞ்சினி, அஞ்சனா, றஜிதா, கீர்த்திகா, திருக்குமரன், ஏகவரதன், ஸோபனா, சங்கீதா, சுகுணா, சிவசெந்தில், சிவசயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 - 12 - 96 அன்று மல்லாவியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
கி. முருகதாசன்
(மருமகன்)

ஸ்ரீ கைலாஸ்,
வட்டுக்கோட்டை. (44224)

திருமதி சவிரியாச்சி சோமசுந்தரம்

கரம்பனைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவிரியாச்சி சோமசுந்தரம் 17 - 12 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், திருமதி மரிஸ்ரெலா சரவணமுத்து (கனடா) காலம் சென்ற J.S அல்பேட் (லண்டன்) றொபேட் (லண்டன்), றிச்சேட் (ஆஸ்திரேலியா), யூலியற் ஆகியோரின் அன்புத் தாயாரும், கு. சரவணமுத்து (கனடா), மீரியம் (லண்டன்), புஸ்பம் (லண்டன்), டிலோ (ஆஸ்திரேலியா), நடராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் நடைபெறும்.

தகவல்:
க. நடராஜா

28, 1ஆம் ஒழுங்கை,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(44222)

திருமதி கந்தையா சரஸ்வதி

சண்டிலிப்பாய், மண்டுமண்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா சரஸ்வதி 23-11-96 இல் துணுக்காயில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், இராசலட்சுமி (ஆசிரியை), இரத்தினவேல் (தவராசா), பாக்கியலட்சுமி, அற்புதவேல் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிரத்தினம் (ஆசிரியர்), காஞ்சனா, இதயராணி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற தியாகராசா, சின்னத்தங்கச்சி, சொர்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் துணுக்காயில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
க. இரத்தினவேல் (தவராசா)
(மண்டுமண்டை)

(சி/3768)

சமய நிகழ்வுகளில்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சுவர்க்கவாசல் ஏகாதசி உற்சவம் இன்று நடைபெறுகிறது.

காலை 6 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவைப் பூசைகளுடன் ஆரம்பமாகி மு. ப. 10. 30 மணிக்கு ஏகாதசி உற்சவம் இடம் பெறும்.

காலை தொடங்கி மாலை வரை சுவர்க்கவாசல் தரிசனம் பெறலாம்.

நாளை காலை 7. 30 மணிக்கு துவாதசி உற்சவமும் நடைபெறும். (அ)

★ ★ ★

மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் திங்கட்கிழமை முழு நாள் நிகழ்வாக திருவாசக முற்றோதல் விழா நடைபெறும். மு. ப. 9. 30 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரை தொடர்ந்து திருவாசகம் முற்றோதப்படும். (அ)

★ ★ ★

மாதகல் புனித தோமையார் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும். காலை 7. 30 மணிக்கு திருநாள் பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்படும். (அ- 30)

மாமனிதர் போட்டி

கொழும்பு, டிச. 20

கொழும்பில் இருந்து வெளிவரும் ''மிட்வீக் மிரர்'' என்னும் வார சஞ்சிகை மாமனிதர் — மாமனுஷி போட்டி ஒன்றை நடத்துகிறது.

இப்போட்டிக்கு வந்த சீட்டுக்களின் முதல் சுற்று முடிவடைந்த நிலையில் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரியா முன்னணி வகிக்கிறார்.

அடுத்ததாக ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இருக்கிறார்கள்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட ஒரு வாசகர் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பெயரை மாமனிதர்என்றுகுறிப்பிட்டு அனுப்பியுள்ளார். அந்தச் சீட்டை அனுப்பிய வாசகரின் பெயர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த என்று குறிப்பிட்டுள்ளது,

''மிட்வீக் மிரர்'' சஞ்சிகை புதன்கிழமை தோறும் வெளிவருகிறது. [அ-3-150]

லங்கா சிமெந்து ஊழியர்களின் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 20

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமையும்— 23 ஆம் திகதி திங்கட்கிழமையும்— காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி.
கணக்கியல்
A/L 97 (2.30 மணி)
கம்பனி செலவுக் கணக்கியல்
A/L 98 (1.30 மணி)
ஆரம்பம்: 21-12-96
(44226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை சிவஞானம்

(அரச மரக்கூட்டுத்தாபன முன்னாள் ஒப்பந்ததாரர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆ. க. சிவஞானம் அவர்கள் 18 - 12 - 1996 புதன்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் நவரத்தினம்மாவின் அன்புக் கணவரும், கலாநிதி சசிகலா (இங்கிலாந்து), சசிலதா (M.S.C. இங்கிலாந்து), அருள்பரம் (இங்கிலாந்து), அகிலன் (மாணவன், யாழ். மருத்துவபீடம்), கண்ணன் (மாணவன், யாழ். மருத்துவபீடம்), றஜந்தன் (மாணவன், யா.இ.க.), றஜீவ் (மாணவன், யா.இ.க.) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன் (பொறியியலாளர், இங்கிலாந்து). நந்தகுமார் (பொறியியலாளர், இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண் ஷைலாஸின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-12-96) சனிக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க.சி. அகிலன்
[மகன்]

171 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
[44232]

திருமதி கந்தையா மகேஸ்வரி

கரவெட்டி—வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா மகேஸ்வரி 18-12-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (லக்ஷ்மி பேக்கரி) அவர்களின் அன்பு மனைவியும், செல்வலிங்கம், செல்வமலர். சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, இராஜலிங்கம், சிவானந்த நாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தில்குமரன், அழகேஸ், செந்தூரன், ஆரூரன், அரவிந்தன், பிரகலாதன், மேனகா, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [20-12-96] காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை [வதிரி] மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
க. சுந்தரலிங்கம் (சுந்தரி)
(மகன்)

152. பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(9094)

திருமதி நாகேஸ்வரி சோமபாலா (பேபி)

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி சோமபாலா 18-12-96 இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் Dr. K. C. சோமபாலாவின் (மாகாணப் பணிப்பாளர், மிருக வைத்திய திணைக்களம், திருகோணமலை) பாசமிகு மனைவியும், ஜகத்ஜயன், சரத்ஜயன், நிரஞ்ஜயன் (பொறியியல்பீட மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி த. குலசேகரம் (அதிபர், G. T. M. S.), திருமதி மு. பாலச்சந்திரன் (ஓமான்), குருசாமி, சிவசுப்பிரமணியம், சிவகிருஸ்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜதீர்த்தனன், உத்ஜயனி, கீதார்த்தனன், கணரூபன், சௌமினி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலையில் நடைபெறும்.

தகவல்:
அ. குலசேகரம்

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி,
(சி/3766)

திருமதி இராசையா இராசம்மா

(முன்னாள் அரிசி விற்பனையாளர்)

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசையா இராசம்மா 18 - 12 - 1996 காலை காலமானார்.

இவர் இராசையாவின் அன்பு மனைவியும், தெய்வபுலேந்திரா, இராஜேஸ்வரி, இராஜகுலேந்திரன், இரட்னேஸ்வரி, திருநாமம் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜலக்ஷ்மி, பாலசிங்கம், மங்களேஸ்வரி, சச்சிதானந்தம், ஆதிரை ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நந்தகுமார், கவிதா, உதயதாசன், பாரதிதாசன், சாந்தி, இதயதாரணி, இனோதாரணி, அனுஷா, அனுராஜ், அனுஷாந்தி, வாகினி, பாலசஞ்சீவன், பங்கயன் ஆகியோரின் அன்புக்குரிய பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் புகழுடல் 18 - 12 - 96 அன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. தெய்வபுலேந்திரா
(மகன்)
துரைசீலன்
(டெறாமகன்)

முருகமூர்த்தி ஆலய வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(சி/3765)

யாழ்ப்பாணம்
நீலாம்பிகை நூலகம்

தூதுவர்கள் உட்பட 490 பேர்
பெருவில் பணயமாகப் பிடிப்பு!

கைதிகளை மீட்க உதவத் தயாரென கிளின்ரன் அறிவிப்பு

லாமா, டிச. 20

பெருநாட்டின் தலைநகரான லாமாவில் ஜப்பானிய தூதரகத்தில் நடந்த விருந்தில் கலந்து கொண்ட 490 பேர் இடதுசாரிப் போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

பெருநாட்டின் வெளியுறவு அமைச்சர், கால்துறை இயக்குநர், மற்றும் ஆஸ்திரியா, பொலிவியா, பிறேசில், கனடா, கியூபா, செக்கோஸ்லாவியா, ஜேர்மனி, இஸ்ரேல், ஜப்பான், ஸ்பெயின், தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்களும் பணயமாகப் பிடிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

லாமாவில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில், ஜப்பானிய மன்னர் அகாசித்தோவின் பிறந்த நாளையொட்டிய மாலை நேர விருந்தின் போது இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

பெருநாட்டு இடதுசாரிப் போராளி இயக்கமான எம். ஆர். ரீ. ஏ. உறுப்பினர்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் போல உள்ளே நுழைந்து அனைவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

பணயக் கைதிகளை விடுவிப்பதாயின் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களை அரசு விடுவிக்க வேண்டும் என எம். ஆர். ரீ. ஏ. நிபந்தனை விதித்துள்ளது.

குறிப்பாக ஆயுள் தண்டனைக் கைதியாக லாமா சிறையில் வாடும் எம். ஆர். ரி. ஏ. இயக்க முக்கிய பிரமுகரான லோறி பேர்சன் என்ற பெண் போராளியின் விடுதலையை அவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

பணயக் கைதிகள் இருக்கும் ஜப்பானியத் தூதரகத்தைச் சுற்றி எம். ஆர். ரீ. ஏ. போராளிகள் வெடிமருந்துகளைப் புதைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

விரைவில் தங்களது கோரிக்கையை அரசு ஏற்காவிட்டால் பணயக் கைதிகள் ஒவ்வொருவராகக் கொல்லப்படுவார்கள் என போராளிகள் எச்சரித்துள்ளனர்.

தூதரகத்தைச் சுற்றி பெருநாட்டு பயங்கரவாத எதிர்ப்புப் படையினர் உத்தரவை எதிர்நோக்கி நிற்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பணயக் கைதிகளை மீட்க சகல உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் செய்தி அனுப்பியுள்ளார்.

விருந்திற்கு வந்திருந்த பெண்கள், முதியோர், குழந்தைகளை போராளிகள் விடுவித்துள்ளனர் எனவும்—

முக்கிய பிரமுகர்களை மட்டும் தடுத்து வைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

அமெரிக்க உளவாளி மரணம்

வேவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் வடகொரியாவால் 3 மாதம் சிறை வைக்கப்பட்டு கடந்த மாதம் விடுவிக்கப்பட்ட அமெரிக்கர் ஒருவர் அமெரிக்காவின் ஹோட்டல் ஒன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அவர் தற்கொலை செய்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவரின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

வடகொரியாவிலிருந்து அமெரிக்கா திரும்பிய அவர் தனது குடும்பத்துக்குச் சொந்தமான ஹோட்டலில் தங்கி இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

நிர்வாக வாரியம் கலைப்பு

தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியின் போது அமைக்கப்பட்ட ஆலய நிர்வாக வாரியம் கலைக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக முதலமைச்சரின் அருணாநிதி தலைமையில் ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. (இ-10)

நேட்டோ விரிவாக்கம் ரஷ்யா அதிருப்தி

மொஸ்கோ, டிச. 20

நேட்டோ கூட்டணியுடன் இராணுவத் தொடர்பு அதிகாரிகளைப் பரிமாறிக் கொள்வதற்கான பரிந்துரையை ரஷ்யா நிராகரித்துள்ளது.

நேட்டோவை கிழக்கு ஐரோப்பாவுக்கு விரிவுபடுத்துவது கசப்பான கெடுபிடிப் போர்க்காலத்துக்கு மீண்டும் உலகை இட்டுச் செல்லக் கூடும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

நேட்டோவின் விரிவாக்கத் திட்டம் ரஷ்யாவுக்கு ஏற்புடையதல்ல என ரஷ்யா தெரிவித்துள்ளது. (இ-10)

இந்தியா - பாகிஸ்தான் விரைவில் உச்சிப்பேச்சு நடத்த முடிவு

புதுடில்லி, டிச. 20

இந்தியாவும் பாகிஸ்தானும் உச்சிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1994 இல் இருந்து பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ள உச்சிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது பற்றி இரு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் புதுடில்லியில் 45 நிமிடங்கள் கலந்துரையாடியுள்ளனர். (இ-10)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி செல்வம் சாமுவேல்

தோற்றம்: 27 — 5 — 1908

மறைவு: 20 — 12 — 1995

''ஆண்டு ஒன்று ஓடிமறைந்தது அம்மா! எம்மனதில் நீங்கள் பெருகிய அன்புச் செயல்கள் நீங்கிடுமோ? இவ்வுலகில் நாங்கள் இருக்குமட்டும் உங்களை மறப்போமோ?

இவர் டானியல் வல்லிபுரம், மேரி ராசம்மா அவர்களுக்குப் பிறந்த நாலு பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். பெற்றோர் இவர்களின் இளம்வயதில் காலஞ்செல்ல, சிறிய தாய் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியை யேன் தங்கம்மா வேலுப்பிள்ளை இவவுக்கும் உடன் பிறந்த சகோதரிகள் புளோறன்ஸ் கந்தசாமி, டேசி அமிர்தம் வல்லிபுரம் ஆகியோருக்கும் அன்புத்தாயாக விளங்கினார். இவர் தனது மேற்படிப்பை வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் பயின்று அப்போது அங்கு கடமையாற்றிய அதிபர் மிஸ் கோகுறெவ்ற் அம்மாவின் மிகவும் அன்புக்குரிய மாணவியாக விளங்கினார். 1939 ஆம் ஆண்டு கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டு ''இங்கிலிஷ் டிரெயின்ட் ரீச்சர்'' ஆக திரும்பவும் தான் கல்வி கற்ற வேம்படிக் கல்லூரிக்கே உப அதிபராகிக் கடமையாற்றி எல்லோரினது மதிப்பையும் அன்பையும் பெற்றார். 1940 ஆம் ஆண்டு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் உப அதிபராகிக் கடமையாற்றினார். அக்காலத்தில் ஹாட்லிக் கல்லூரியில் உப அதிபராக இருந்த திரு. S. T. சாமுவேல் அவர்களை விவாகஞ் செய்து 1943 இல் திரு. ஜோன் கிறிஸ்தோப்பர் பேரின்பநாயகத்துக்குத் தாயானார். அவரின் சகோதரி இன்பமணி சாமுவேல் ஹாட்லிக்கல்லூரியில் பின் உப அதிபராக இருந்த W. N. S. சாமுவேலை மணஞ்செய்து அவர்களுக்கு நாலு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். 1963 இல் கணவர் S. T. சாமுவேல் காலஞ் செல்ல தான் பிறந்த இடமான வியாபாரி மூலைக்கு வந்து ஆசையம்மா, சகோதரிகளுடன் உறுதுணையாகச் சீவித்து தன்னையே அர்ப்பணம் செய்து காட்டினார். கடைசி மூச்சு மட்டும் சகோதரி அமிர்தத்திற்கு அன்புத் தாயாகவுமிருந்து, அவவுக்கு அன்பு முத்தம் செய்து அவவின் ஒரே ஒரு நினைப்போடு தனது அன்பான முன்னோர் சென்ற பாதையை நாடினார்.

''முன்பு நீங்கள் சென்ற இடம் திரும்பும்வரை வாசலிலே காத்திருப்பேன்; சின்னக்கா இன்று நீங்கள் சென்ற இடம் தெரியாமல் தவிக்கிறேன் அக்கா''

(சகோதரி)

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் பிரகாசிக்கும் அன்புத்தெய்வமே! கர்த்தரிடம் பேரின்ப வாழ்வு பெறப் பிரார்த்திக்கிறோம்.

Dr. J. C. P. சாமுவேல் (மகன்) U. S. A.
M. R. S. J.C.P. சாமுவேல் (மருமகள்) U.S.A.

பேரப்பிள்ளைகள்

Dr. வர்மன் U. S. A.
என்ஜினியர் ரவி U. S. A.
யமுனா (இசைக்கலைஞர்) U. S. A.

W. N. S. இன் பிள்ளைகள்

ஆசிரியர் மோகன், Dr. வசி
வித்துவான் பிரபா, என்ஜினியர் கிருபா
திருமதி K. அருளம்பலம், (மருமகள்)
சகோதரி D. A. வல்லிபுரம்

BETHEL,
Viyapari moolai,
Point Pedro.
(சி/ 3709)

---

41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் E. R. ஆசீர்வாதம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

அன்னை மடியில்: 1929 — 04 — 25

ஆண்டவனடியில்: 1996 — 11 — 11

அன்புத் தெய்வமே! ஆருயிர்த் துணைவரே!
இனிக்க இனிக்கப் பேசி எல்லோரையும் சிரிக்க வைத்தாய்;
எம்மவரை அழ வைத்து ஏனோ பிரிந்து சென்றாய்?
பாசத்தைப் பொழிந்து நேசத்தைப் பிழிந்து
பண்புடன் வளர்த்துப் பல்கலையூட்டிய பப்பா!
கருணைமிக்க எம் அருமை அண்ணா!
பெருமையுடன் எமை அணைத்து
மழலை மொழிகேட்டு மகிழ்ந்திட்ட தாத்தா!
காலமெல்லாம் உனைமறவோம்
கண்ணீரைச் சிந்துகின்றோம்.
உன் ஆன்மா சாந்தி பெற எந்நாளும்
வேண்டிடுவோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நாளை 21-12-96 காலை 6-00 மணிக்கு யாழ். புனித மரியாள் ஆலயத்தில் (O. L. R.) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்னாரின் இறுதி அஞ்சலியிற் கலந்து எமக்குப் பலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், விசேடமாக புனித மரியாள் வித்தியாலயம் (O. L. R.), சென் யேம்ஸ் மகளிர் வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அவர் பிரிவாற் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்.

இல. 41, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். [44218]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி வெற்றிடம்

நிர்வாக உத்தியோகத்தர்

மனித நேய அடிப்படையில் சேவை புரியும் நிறுவனத்தின் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கு அரச / அரச சார்பற்ற நிறுவனங்களில் 15 வருட சேவை நிறைவு அனுபவமுடையவர்களிடமிருந்து 30 - 12 - 96 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பின் வரும் முகவரியில் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளம்--

நேரில் பேசித் தீர்க்கப்படும்.

குறிப்பு--

தென்மராட்சி பிரதேசத்தினை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
அறவழி செயலகம்,
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி. (சி/3760)

இருவர் கைது

கொழும்பு, டிச. 20

வட பகுதிக்குத் தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முற்பட்ட தாகக் கூறப்படும் தமிழ் யுவதி ஒருவரும் மற்று மொரு நபரும் தாண்டிக் குளம் சோதனை முகாமில் நேற்றுமுன்தினம் கைதாகினர்.

இந்தப் பெண் மோட்டார் உதிரிப்பாகங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களை தன்னுடைய பொதிகளுக்குள் மறைத்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

துரைசிங்கம் ஈஸ்வரி என்ற யுவதியும் ரோர்ச் பற்றறிகளைக் கொண்டு செல்ல முற்பட்ட அன்ரனி இராசப்பு என்ற நபரும் கைது செய்யப்பட்டவர்களாவர்.

(இ-5)

பாராட்டுகின்றோம்

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

திரு. குமாரசாமி கணேசதாசன்

அவர்களுக்கு வலி. மேற்கு விவாக (பொது) பதிவாளராகவும், மானிப்பாய் பிறப்பு, இறப்புப் பிரிவுப் பதிவாளராகவும் நியமனம் கிடைத்தமையை முன்னிட்டு அவரை இதய பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சுதுமலை, மானிப்பாய் வாழ் மக்கள்.

(9088)

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா கட்டுரைப் போட்டி

★ **9, 10, 11, 12** ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும்.
இலங்கையில் எப்பகுதி மாணவர்களும் பங்கு பற்றலாம்.

★ விடயங்கள்;
1. சுவாமி விவேகானந்தரின் மனித நேயம்.
2. சிறுவர்களது சுவாமி விவேகானந்தர்.
3. என்னைக் கவர்ந்த சுவாமிஜி.
4. சுவாமி விவேகானந்தரும் ஆண்மையும் - (Manliness)
5. சுவாமி விவேகானந்தரின் கல்வி.

★ ஒரு மாணவர் ஏதாவது ஒரு தலைப்பில் 450 சொற்களுக்கு குறையாமல் எழுதுதல் வேண்டும். கட்டுரையில் பொருள்நயமும் கட்டுரை எழுதுபவரின் ஆற்றலும் கருத்தில் கொள்ளப்படும்.

★ கட்டுரை மாணவனால் எழுதப்பட்டது என்பது கல்லூரி அதிபரால் உறுதி செய்யப்பட்டு **31-03-97** க்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும். பரிசுகள் வழங்கப்படும்.

தொடர்பு முகவரி:
ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

(சி-3761)

குருத்துவ வெண் பொன் யூபிலி

1996, நொவம்பர்த் திங்கள் 20 ஆம் நாள்

மிருசுவில் பங்குத் தந்தை

அருட்திரு. இராசசிங்கம் பீற்றர் துரைரட்னம்

அடிகளாரின் வெண் பொன் விழாவின் போது,
மிருசுவில் பங்கு மக்கள் சார்பில், ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தின்

தமிழாக்க சாராம்சம்

மதிப்பிற்குரிய அவைத் தலைவரே!
அன்பிற்குரிய விழாநாயகரே!
யாழ். மறைமாவட்ட விக்கார் ஜெனரல் அவர்களே!
கௌரவ பிரதேச இராணுவத் தலைமை அதிகாரி அவர்களே!
வண. குருப்பிரசாதிகளே! சங்கைக்குரிய அருட்சகோதரிகளே!
பெரியோரே! பிள்ளைகளே!

உங்கள் அனைவருக்கும் எமது தாழ்மையான வணக்கம் உரித்தாகுக.

இன்றைய சுபநாளின் இன்பகரமான நிகழ்வுகள் எமது புனித நீக்கலஸ் தேவாலய வரலாற்று ஏடுகளில் பொன்னட்சரங்களாற் பொறிக்கப்பட்டு என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவை ஆகும். அத்துணை தூரம் கத்தோலிக்க துறவறவாழ்வு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே அன்பிற்குரிய

யூபிலி நாயகர் அவர்களே!

எமது இதயங்களில் சுடர் வீசிக்கொண்டிருக்கும் ஆன்மீக மகிழ்ச்சியைப் பிரதிபலிப்பான் வேண்டி, தங்களுக்கு பூமாலை அணிவித்து, தங்களைக் கௌரவிக்க ஆசிக்கின்றோம். தயவு கூர்ந்து மனமுவந்து ஏற்றருள்க.

மதிப்பிற்குரிய அவையோரே!

இன்று எங்கள் பங்குத்தந்தை **பீற்றர்** துரைரட்னம் அவர்கள், கத்தோலிக்க திருச்சபையின் தெய்வீக திராட்சைத் தோட்டத்தில் தமது இறை பணியின் 25 வருடங்களைப் பூர்த்திசெய்கின்றார். உண்மையில் ஞான வீரியம் நிறைந்த ஓர் இளைஞனாக இருந்த எமது விழா நாயகரின் வாழ்வில், 1971 ஆம் வருடம் கார்த்திகைத்திங்கள் 20 ஆம் நாள் அவருக்கும் அவர் பிறந்த ஊரான வயாவிளானுக்கும் மிகவும் அருள் நிறைந்த - மனோகரமான - மாட்சிமை மிக்க நாளாகும் தமது சிந்தனை, சொல், செயல், ஆளுமை, முழுமையான மானிட புருடோத்துவம் அனைத்தையும் எங்கள் இறைவனும், மீட்பரும், நித்திய வாழ்வுமாகிய யேசுவின் சேவைக்கு அர்ப்பணித்து, தமது 28 ஆவது வயதில் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட. உன்னத நிகழ்வின் நாளாகும்.

அன்புமிகும் எங்கள் பங்குத்தந்தை அவர்களே!

தங்களது இறை ஊழியத்தின் எல்லைக்கும் அப்பாற் சென்று சேவையாற்றும் உயர் மாண்பினைக் கடந்த வருடம் ஏற்பட்ட பாரிய மக்கள் இடம்பெயர்வின் போது நன்கு நிருபணம் செய்துள்ளீர்கள். பதற்றமானதோர் சூழ்நிலையில் பகலென்றும் இரவென்றும் பாராது, சாதி மத பேதம் காணாது, அனைவரும் ஆண்டவனின் அன்புக் குழந்தைகளே என அரவணைத்து தஞ்சமளித்த மகோன்னத சேவை தங்களது பூரண்த்துவம் வாய்ந்த சேவைத் தொகுப்பின் மிகத்தெளிவானதோர் எடுத்துக்காட்டாக மிளிர்கின்றதென்றால் அது மிகையாகாது.

எனவே, தங்கள் யூபிலி விழா வெகு சம்பிரமமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாமும் எமது அன்பையும் ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தங்களுக்கு சமர்ப்பணம் செய்யவிரும்புகின்றோம்.

வணக்கத்துக்குரிய ஞானத்தந்தாய்!

★ பரிசுத்தமானதும், அப்போஸ்தொலிக்க பாரம்பரியமானதும், உலகளாவியதுமான கத்தோலிக்க திருமறையில் தாங்கள் இன்னும் பல்லாண்டு காலம் நற்சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகிறோம்.

★ தங்கள் ஞானமக்களுக்கு அன்பையும் சமாதானத்தையும் ஒளிவீசி, சிறந்ததோர் கலங்கரைத் தீபமாக விளங்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

★ நீடிய ஆயுளும் நிறை பலமும் சந்தோஷமும் சுபீட்சமும் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

★ ஈற்றில், முடிவில்லா விண்ணரசில் இறைவனுடன் என்றென்றும் இன்புற்று வாழ வேண்டுமென வாயார மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

எங்கள் இதய பூர்வமான இந்த நல்வாழ்த்துக்களை, எங்கள் ஆண்டவளும் அமலோற்பவியுமான புனித மேரிமாதா, எங்கள் பாதுகாவலராம் புனித நீக்கலஸ் ஆகியோரின் பரிந்துரையால் இறைவன் தங்களுக்கு அளிப்பாராக.

நன்றி.

இங்ஙனம்:

கிறீஸ்து யேசுவில் தங்கள் அன்பும் கீழ்ப்படிவுமுள்ள
மிருசுவில் பங்கு மக்கள்.

1996 — 11 — 20 ஆம் நாள் வாசித்தளிக்கப்பட்டது. (44174)

மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

எங்கள் தலைவா! அப்பா!

அன்னை மடியினில்:
01
—
12
—
1927

ஆண்டவன் அடியினில்:
24
—
12
—
1993

அமரர் சின்னத்துரை சதானந்தன்

[ஓய்வு பெற்ற தபாலதிபர்]

திதி: 20 - 12 - 1996

தங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை-வேண்டுகின்றோம்.

என்றும் தங்களின் ஒளியின்றி வாடும்:

நோர்வேயில் வசிப்பவர்களான

அன்பு மனைவி: திருமதி சரஸ்வதி சதானந்தன்
பாசமிகு பிள்ளைகள்: ஸ்ரீதரன், ஆனந்தகரன்
மருமக்கள்: பேபிசசி, பாமினி
பேரப்பிள்ளைகள்: சிவதர்ஷினி, செந்தூரன், ஆரூரன், அர்ச்சனா, செயோன்.

மற்றும்

உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
பொ. கனகரத்தினம்,
''ஆறுபடை வீடு'',
35, விபுலானந்தர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (44175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தாராளமாக டாக்டர்கள் இருந்தும்

வெளிநாட்டிலிருந்து டாக்டர்களை யாழ். அழைக்க வேண்டிய நிலை

பிரதிப் பணிப்பாளர்நாயகம் கவலை தெரிவிப்பு

கொழும்பு, டிச. 20

இலங்கையில் தாராளமாக டாக்டர்கள் இருக்கும் போது யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வெளிநாட்டு டாக்டர்களை அழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி சுகாதார பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி கே. எம். வேலும்மயிலும் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நீக்க உதவுமாறு அரசாங்க வைத்தியர்கள் சங்கத்தைக் கேட்டோம். ''யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடக்கிறது. அங்கு சென்று எப்படிப்பணியாற்ற முடியும்? நிலைமை வழமைக்கு திரும்பிய பின் டாக்டர்களை அங்கு அனுப்புகிறோம்'' என்று வைத்தியர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் எமக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மடு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் கிழக்கில் சில இடங்களில் பிரெஞ்சு, கியூபா நாட்டு டாக்டர்கள் பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தங்கியுள்ள யாழ்ப்பாண டாக்டர்களும் அங்கு சென்று கடமையாற்றத் தயாரில்லை.

4 ஆயிரம் டாக்டர்களை அங்கத்தவர்களாகக்கொண்டு இயங்கும்அரசாங்கவைத்தியர்கள் சங்கம் 25 டாக்டர்களையாவது அங்கு ஏன் அனுப்ப முடியாது? சிங்கள டாக்டர்கள் அங்கு செல்ல விரும்புகிறார்கள். ஆனால் தமக்கு மொழிப்பிரச்சினை என்று அவர்கள் கூறுகிறார்கள் என்கிறது அரசாங்க வைத்தியர் சங்கம்–

பிரெஞ்சு டாக்டர்கள் அங்கு மொழிப் பிரச்சினையின்றி பணியாற்றும் போது இவர்கள் போலிக் காரணங்களை கூறுகிறார்கள்.

அரசாங்க வைத்தியர் சங்கம் டாக்டர்களைத் தர மறுத்துள்ளதையடுத்து பிரெஞ்சு, கியூபா டாக்டர்களை யாழ்ப்பாணத்தில் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் —

இப்படி டாக்டர் வேலும்மயிலும் மேலும் தெரிவித்தார்.

(இ-3-150)

14 கைதிகள் கொழும்புக்கு இடமாற்றம்

கொழும்பு,டிச.20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, மேல் நீதிமன்றத்தில் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 கைதிகள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வந்த விசேட வாகனத்தில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-3)

குப்பி விளக்கு தட்டுண்டு சிறுமி எரிகாயம்

யாழ்ப்பாணம், டிச. 20

நித்திரையில் குப்பி விளக்குத் தட்டுண்டு தீப்பற்றியதில் 6வயதுச் சிறுமி எரிகாயத்துக் குள்ளானார்.

கோண்டாவிலில் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் துரைராசா வனஜா என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(இ-15)

மனிதஉரிமைகள் செயலணிக்குழு; ஜன. நடுப்பகுதியில் இங்கு கிளை

கொழும்பு, டிச. 20

மனித உரிமைகள் செயலணிக் குழு ஜனவரி மாத நடுப்பகுதியில் அதன் யாழ்ப்பாணக் கிளையைத் திறக்க உள்ளது.

இதற்காக யாழ்ப்பாண செயலகத்துக்குச் சமீபமாக இடம் ஒன்றை செயலணிக் குழு தெரிவு செய்துள்ளது.

இந்தக் கிளை அலுவலகத்துக்கான ஊழியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் செயலணிக் குழுத் தலைவர் சி. ரி. ஜான்ஸ் தெரிவித்தார்.

(இ-5)

மும் மலங்களை நீக்கி விழிப்படைய எழுப்புவதே திருப்பள்ளி எழுச்சி

வழிபாட்டுக்கு உகந்த மார்கழி மாதம்

மார்கழி மாதம் மதிப்புக்குரிய மாதம்.இறைபக்தியில் எம்மை ஈடுபடுத்தும்இயற்கைத் தன்மை இம்மாதத்திற்கு உண்டு. மானுட நிகழ்ச்சிகளை நீக்கித் தனியாக இறைவழிபாட்டிற்குரிய மாதமாக மார்கழி மாதம் திகழ்கிறது.

சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம்மார்கழியிலேயே வருகிறது. திருஞான சம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்ற போது ஆதிரை நாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடியுள்ளார்.

காலத்தோடொட்டியும் மார்கழிக்கு ஒரு சிறப்புண்டு. எங்கும் குளிர்;சிறுசிறுமழைத் தூற்றல் பசும்புற்கள் அடர்ந்து வளர்ந்து பச்சைப் பசேலென்ற காட்சி, இவையாவும் உள்ளத்தையும் உடம்பையும் அமைதிப்படுத்தும். பகவற்கீதையில் மாதங்களில் நான் மார்கழியாகவுள்ளேன் எனக் கிருஷ்ணர் கூறியுள்ளார்–

சிவ்வழிபாடான திருவெம்பாவையும் விஷ்ணு வழிபாடான ஏகாதசியும் சேர்ந்து இது இந்துக்களின் சிறந்த வழிபாட்டு மாதமாகின்றது.

எமது ஒருவருட காலம் தேவர்களுக்கு ஒரு நாளாக அமைகிறது. தேவர்களுக்குத் தைமாதம் முதல் ஆனிவரையுள்ள உத்தராயண காலம் பகற் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையான தக்ஷணாயன காலம் இரவுப் பொழுதாகவும் அமைகின்றது. தேவர்களுக்கு மார்கழி மாதம் வைகறைக் காலமாகையால் திருவாதிரையில் சிவனையும் ஏகாதசியில் மகா விஷ்ணுவையும் வழிபாடு செய்து இன்புறுவர்.

''வைகறைத் துயிலெழு'' என்பது தமிழ் மூதாட்டியின் முதுமொழி. மானிடரையும், தேவர்களையும் இறைவனையும் துயிலெழுப்பும் வகையில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது, ஆதியும் அந்தமும் இல்லாத உறக்கமும் விழிப்பு மில்லாத ஆண்டவனைத் துயிலெழுப்புவது போல, எங்களை நாங்களே உணர்ந்து இருளில் மூழ்கடித்துள்ள மும்மலங்களை நீக்கி ஞான ஒளி பெற்று விழிப்படைய வேண்டுமென்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

மார்கழி மாத ஞாயிற்றுக் கிழமை விரதம் மிகப் பலனளிக்கும். இம்மாதம் தனுராசியில் சூரியன் இருக்க நேர்கோட்டில் சந்திரன் திருவாதிரை நட்சத்திரத்தில் மீனராசியில் இருக்கும் காலம். இறைவன் இந்நாள்களிலே திருநடனம் புரிந்து பேரின்பத்தை நமக்குத் தரும் காலமென்பார்கள்.

இம் மாதத்தில் மக்கள் யாவரும் வைகறையில் எழுந்து நீராடி ஆலய வழிபாடு செய்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பதிகங்களை பொருள் உணர்ந்து படித்தல் நன்மை தரும். அவ்வாறு செய்வதன் மூலம் மன அமைதியும் இறைபக்தியும் ஏற்படுவதுடன், எமது பீடைகள், துன்பங்கள், அவலங்கள் யாவும் அற்றுப் போகும்.

நாம் நமது வீட்டையும், சூழலையும் சுத்தம் செய்து முற்றத்தில் மெழுகிக் கோலமிட்டு பிள்ளையார் பிடித்து வைத்து பூவினால் அலங்கரித்து தீபம் வைத்து வழிபட்டால் தேவர்கள் மனமகிழ்ந்து எம்மையும் எமது வீட்டையும், நாட்டையும் பார்த்து, அருள் புரிவார்கள் என்பது நீண்டகால நம்பிக்கை. மேலும் எமது இன்னல்களாகிய இருள் அகற்றித் துயிலுணர்த்தி ஞான நீராடி அருள் பெற்று நன்நெறி காட்டும் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவைப் பாடல்களை ஓதி உணர்ந்து உய்தியடைவோமாக.

= கா. கணேசதாசன்.

ஞானக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

அமரர் கந்தையா சின்னையா

[முன்னாள் முகாமையாளர் - (சந்தைப்படுத்தல் பகுதி) கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூட்டுறவு சங்கம்]

தோற்றம்: 1921-12-18 மறைவு: 1996-11-20

நேற்றுவரை நீயிருந்தாய் எங்கள் வீட்டில்
நிதர்சனமாய்த் தெய்வத்தைக் கண்டோ மையா
வேற்குமரன் சொருபமின்றி வெளவால் தூங்கும்
வெறுங்கோயில் ஆனதையா இருள்சூழ்ந்து தின்று
ஆற்றுவமோ எம்துயரம் ஆவி உள்ளவரை
ஆறாது ஆறாது ஆறாதையா
போற்றிடுவோம் உன்நினைவை எங்கள் உள்ளப்
பொற்கோயில் தனில்வைத்துப் பூசிப்போமே!

அன்னாரது வீட்டில் இன்று 20 - 12 - 96 இல் நடைபெறும் அந்திசாஸ்திர கருமகாரியங்களிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சின்னவுடையார் வளவு,
வதிரி,
கரவெட்டி. (44219)

2 ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு: 28 — 10 — 1928

உதிர்வு: 28 — 12 — 1994

திருமதி
மங்கையர்க்கரசி குமாரசுவாமி

எங்கள் குடும்பத்தில் தந்தைக்குத் தந்தையாக எங்களையெல்லாம் பேணி வளர்த்து பாசமுடன் வழி நடத்தி எங்கள் நலம் காண விழைந்த அன்பு அன்னையே! ஆண்டுகள் இரண்டு போனாலும் நீங்காத நினைவுகளோடு உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கும்:

மக்கள், மருமக்கள், சகோதரி,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

''குமரபுரம்'',
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (44228)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், கடை சோக்கேஸ், ரியூட்டறி மேசைகள், எவர் சில்வர், மரப் பெட்டகங்கள், ஹீரோ, லுமாலா சைக்கிள்கள், C.90 சுப்பர் கப் (களுத்துத் திறப்பு). இரும்புப் பெட்டி, தையல் மெசின் ஆகியன விற்பனைக்குண்டு. க. கோபால், ஜும்மா பள்ளி வாசல் லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(44182)

எமது சங்கத்தில் விதை வெங்காயம் விற்பனைக் குண்டு. தேவையானவர்கள் 25 - 12 - 96 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் பார்வையிட்டு தங்கள் விலை விவரங்களை சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-3753)

7 அங்குலம் X 4 அங்குலம் (நீளம் 15 அடி, 14 அடி) 6 அங்குலம், X 2 அங்குலம் நீளம் (12 அடி, 16 அடி, 11 அடி) உடைய றங்கூன் தேக்கம் தீராந்திகள் ஜன்னல், நிலை, பாலை, முதிரைத், தீராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. திருமதி ப. கிருஷ்ணன், வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. (வட்டுக்கோட்டைச் சந்திக்கு அண்மையில்). (44210)

தவறிவிட்டது

83 ஸ்ரீ 5/8 இலக்க மோட்டார் சைக்கிள் புத்தகமும், 8 ஸ்ரீ 4455 இலக்க கார் புத்தகமும், மானிப்பாய், கூழாவடிச் சந்திக்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் றஞ்சன் ஹாட்வெயரில் ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். செ. அம்பிகாபதி. (44216)

எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் 25-12-96 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காண் விலாசத்தில் எருவைப் பார்வையிட்டு தங்கள் விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-3754)

மணமக்கள் தேவை

ஆசிரியர்களான சகோதரங்களுக்கு மாற்றாக 38 வயதுக்குள்ளும் செவ்வாயுள்ள Post Man 33 வயதிற்கும் ஆசிரியர் 37 வயதிற்கும் பட்டதாரி ஆசிரியை 32 வயதிற்கும் தொழிலுள்ள மணமக்கள் தேவை. மு. செல்லப்பா புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.
(44205)

புலமைப் பரிசில் ஆண்டு 5

கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 90 வீத புள்ளிகள் பெறுவதற்கு அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி.
(44200)

சலவைப்பவுடர்

தற்பொழுது எல்லாக் கடைகளிலும் சகல ப. நோ. கூ. சங்க கிளைகளிலும் கிடைக்கின்றது. சிறியது 6/- நடுத்தரம் 25/-, பெரியது 50/- வெற்றுப் பக்கற்றுகளுக்குப் பரிசில்கள் உண்டு.

— மில்க்வைற்
(சி/3759)

யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

பொதுக் கூட்டம்

காலம்: 29 - 12 - 96 ஞாயிறு காலை 9 மணி
இடம்: கல்லூரி S. P. நடராஜா மண்டபம்
விடயம்: புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்கால செயற்பாடுகளும்.

மேற்படி கூட்டத்துக்கான பிரேரணைகள் சமர்ப்பிப்போரும், புதிதாக சேரவிரும்புவோரும் 25 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். மேற்படி திகதியின் பின் எதுவும் ஏற்கப்பட மாட்டாது.

எஸ். பத்மராஜா
செயலாளர்.
(44217)

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 19 — 11 — 1946

உதிர்வு: 31 — 12 — 1995

அமரர்
இரத்தினபூபதி பொன்னம்பலம்
(சின்னக்கிளி)

திதி: 20 - 12 - 1996

ஓராண்டே!
இறவாத அன்புடனே
எம்முடன் இருந்தவள் காலத்தை
கண்டு களிக்க
ஒரு முறை பின்நோக்கிச் செல்லாயோ!
இல்லையேல்,
அன்பு நெஞ்சங்களின் துன்பச் சுமையையும்
பிஞ்சு மாம்பழத்தின் கொஞ்சு மொழியையும்
சுமந்து வரும் வலியெனக்கு
இல்லை யென்றாவது
இவளிடம் கூறிவிடு.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

சு. பொன்னம்பலம்,
''பொன்சிவபதி'',
இணுவில் தெற்கு,
சுன்னாகம்.
(சி/3746)

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி சசிக்கா ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்களின் அன்புத் தந்தையார்

திரு. V. S. குணசிங்கம்

அவர்களின் மறைவையொட்டி துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்.
யா | புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்.
(44223)

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 02 — 1969

மறைவு: 09 — 12 — 1989

செல்வி சங்கரப்பிள்ளை தேவசாந்தி
(சாந்தி)

திதி: **20 - 12 - 1996**

நீ எம்மை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன.
எப்படியம்மா உன்னை மறப்பது?
மகளே!
உன் வரவைப் பார்த்து
கண்களெல்லாம் பூத்திருக்கின்றன.
வா மகளே வா
நாம் இழந்த வசந்தத்தைக் கொண்டுவா!
ஊண் உறக்கமின்றி
உன் நினைவால் வாடும்
எங்களுக்கு ஆறுதலைத் தா!

அம்மா, அப்பா, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

கோப்பாய் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.
(44203)

நீங்கா நினைவில் ஓராண்டு

மண்ணில்: 12 — 02 — 1968

விண்ணில்: 01 — 01 — 1996

குணபாலசிங்கம் கிருபாகர்
(விவசாய - பொருளியல் சிறப்பு இறுதியாண்டு மாணவன், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம்)

திதி: 20 - 12 - 1996

உடல் விழுந்து எங்கும் நிறைந்த
பரம் பொருளாக நிறைந்து நிற்கின்றீர்.
உமது இலட்சணங்கள் ஒரு கணம்தானும்
எம்மை விட்டு அகன்றதில்லை.
எனினும், உம்மை சூக்குமமாக உணர்ந்து
அறிந்து கொள்ளும் சக்தியைப்
பெறுவதற்கு பகவான் பாபாவிடம்
தினம் வேண்டி நிற்கின்றோம்.

அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி.

கு. சாந்தமோகன்,
கொக்குவில்.
[9087]

"சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரத்தை
அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டி வைப்போம்"

ESTD:-1973 REGD:-No J/7993

The Express Institute
IRUPALAI - KOPAY.

பாலர் கல்விப் பிரிவு ★ NURSERY

பயிற்சியும், அனுபவமும் நிறைந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

★ ஜனவரி 1997இல் ஆரம்பம் ★

20 குழந்தைகளுக்கான இடவசதி மட்டுமே ஏற்படுத்தப்பட்டிருப்பதால் உடனடியாக பதிந்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்.

(44196) -- அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மருந்தகங்களுக்கு உரிமம்

உரிமம் (லைசென்ஸ்) பெறாத மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் வை. ஸ்ரீகாந்தா அறிவித்திருக்கிறார். நீண்ட காலமாகத் தேவைப்பட்ட ஒரு நடவடிக்கை குறித்து இப்போதாவது சிந்திக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

குடாநாட்டில் உள்ள மருந்தகங்களில் பலவும் கடந்த சில காலமாக எவ்வித சட்டக் கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் அனுசரிக்காமல் இயங்கி வருவது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

மருந்தகங்கள் ஏனைய வர்த்தக நிலையங்கள் போலன்றி, மக்களின் உயிர்களைக் காப்பதற்கு உறுதுணையாக உள்ள மருந்துகளை விற்பனை செய்வனவாகும். எனவே அவை மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி இயங்க வேண்டியவை, வெறும் இலாப நோக்குடனான வர்த்தக நிலையங்கள் போன்று பொறுப்பற்ற முறையில் இயங்கக்கூடாது.

மருந்தகங்கள் மக்கள் நலனை முன்னிறுத்தி இயங்குகின்றனவா, உரிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனவா என்று இதுவரை உரிய விதத்தில் கண்காணிக்கப்படவில்லை; கண்டிப்புக் காண்பிக்கப்படவில்லை என்பதனை அரச தரப்பினர் ஒப்புக்கொண்டாக வேண்டும். தமக்குரிய பொறுப்பைச் சரிவர நிறைவேற்றவில்லை என்பதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

குடாநாட்டு மருந்தகங்களில் பல, தகுதியும் தேர்ச்சியும் பெற்ற மருந்தாளர்கள் இன்றி இயங்குவது பெரும் பாரதூரமான விடயமாகும். மேலை நாட்டு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்களில் தகுதியும் தேர்ச்சியும் பெற்ற மருந்தாளர் ஒருவராவது பணி புரிய வேண்டும் என்பது விதிமுறை

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல மருந்தகங்களில் அந்த விதி சரியாக அனுசரிக்கப்படவில்லை. வாசகர் திருமுகப் பகுதியில் உதயன் வாசகர் ஒருவர் எழுதியது போல, குளிகைகளின் நிறங்களை வைத்து மருந்து கொடுப்பவர்களே இப்போது அதிகம்.

இத்தகையோர் மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் மருந்தகத்தில் விற்பனையாளர்களாக பணி புரிந்த பின்னர், தாமே வைத்தியர்களாகிவிடும் ஆபத்தும் நிலவுகின்றது.

நோயாளர்களில் சிலரும், வைத்திய ஆலோசனை பெறாமல் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்று தாமே முடிவு செய்து, தாமே மருத்துவர்களாக மாறி, மருந்துகளைத் தன்னிச்சையாக வாங்குவதும் உண்டு. இத்தகையோருக்கு கேட்டுக் கேள்வி இல்லாமல் மருந்து வகைகளை விற்பனை செய்வதும் தடுக்கப்பட வேண்டும்.

மருந்தகங்கள் பலசரக்குச் சில்லறைக் கடைகள் என்று எண்ணாது மருந்தக உரிமையாளர்களே தமது தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து, மக்கள் நலன் கருதி இயங்கினால், சட்ட நடவடிக்கை தேவைப்படாது.

அப்படி இல்லையெனில், சமூக நலனின் பொருட்டு சட்டம் போட்டுத்தான் வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

கிளிநொச்சியில் குளம் உடைத்து
300 குடும்பங்கள் இடம் பெயர்வு

வவுனியா, டிச. 20

வன்னி மாவட்டத்தில் தொடரும் மழையால் கிளிநொச்சிப் பகுதியில் உள்ள மணியர் குளம் உடைப்பெடுத்தது. இதன் காரணமாக அப்பகுதியில் வாழ்ந்த 300 குடும்பங்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்தன.

இடம் பெயர்ந்த குடும்பங்கள் வீடுகளிலும், ஆலயங்களிலும், வீதியோரங்களிலும் தங்கி உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அகதிகளான இவர்களுக்கு மூன்று நாள்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது.

அத்துடன் இவர்களுக்கு நிவாரணம் மற்றும் தங்குமிட வசதி வழங்க அவசர உதவியாக ஒரு லட்சம் ரூபாவை அங்குள்ள அதிகாரிகள் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

(இ-3)

வடக்கு சிவில் நிர்வாகம் குறித்து தொண்டர் நிறுவனங்கள் அதிருப்தி

கொழும்பு, டிச. 20

யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப்படையினர் சிவில்நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து அங்கு பணிகளில் ஈடுபட்டுள்ள சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் அதிருப்தி தெரிவித்துள்ளன என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

படையினர் சிவில் கடமைகளில் ஈடுபடுவதால் தாம் அங்கு சுதந்திரமாக செயற்பட முடியாதுள்ளது என்றும்—

அத்துடன் தமது கடமைகளும் சில சமயங்களில் பாதிக்கப்படுவதாகவும் அவை தெரிவித்துள்ளன என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

வடக்கில் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் திருப்திகரமானவையாக இல்லை. படையினர் சிவில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவதால் அவர்களை முழுமையாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியவில்லை என பாதுகாப்புப் படைத்தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி, டிச. 20

தென்மராட்சிப் பகுதியில் காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் இந் நோய்களினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொது மக்களின் பாவனையில் உள்ள அனைத்துக் கிணறுகளுக்கும் குளோரின் இடுமாறும், கொதிக்க வைத்த நீரையே பருகுமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி உள்ளனர்.

(அ-117)

வீட்டு நிகழ்வுகள் ஒத்திவைப்பு

தென்மராட்சி, டிச. 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல பகுதிகளில் வீடுகளைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதால், வீட்டு நிகழ்வுகள் சில பின்போடப்பட்டன.

திகதி குறிப்பிடப்பட்ட பூப்புனித நீராட்டுவிழாக்கள், பிறந்தநாள் நிகழ்வுகள், அந்தியேட்டிக் கிரியைகள், ஆண்டுத் திவச நிகழ்வுகள் போன்றவை மறுதிகதி குறிப்பிடாமல் பின்போடப்பட்டுள்ளதாக அறியவந்தது.

[அ- 117]

வைத்தியரத்தினா பிணைப்பணம் குறைப்பு

கொழும்பு, டிச. 20

இராணுவத்தினருக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ததில் 45 லட்சம் ரூபா ஊழல் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினாவுக்குவிதிக்கப்பட்ட பிணை ஏழரை லட்சத்திலிருந்து 5 லட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வைத்தியரத்தினா சார்பில் தோற்றிய வழக்கறிஞர் கோசல விஜயதிலக விடுத்த கோரிக்கையை அடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் பிணைப் பணத்தை 5 லட்சமாகக் குறைத்தார்.

1997 மார்ச் மாதம் 19ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அதற்கு வசதியாக தேவையான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

(இ-10)

தூத்துக்குடி-கொழும்பு "வத்தை" நிறுத்தம் குறித்து ஆராய்வு

புதுடில்லி, டிச. 20

இந்திய மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் கடந்த புதன்கிழமை இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலைச் சந்தித்து தூத்துக் குடியிலிருந்து ''வத்தை''களில் இலங்கைக்குப் பொருள்களை அனுப்பும் பிரச்சினை குறித்து விவாதித்தார்.

இந்தப் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என குஜ்ராலை அவர் கேட்டுக் கொண்டார்.

தூத்துக்குடியிலிருந்து வரும் ''வத்தை''களில் புலிகள் ஊடுருவி வந்து கொழும்புத் துறைமுகத்தைத் தாக்கலாம் என்று அஞ்சப்படுவதால் தூத்துக்குடி — கொழும்பு ''வத்தை'' போக்குவரத்தை இலங்கை அரசு தடைசெய்துள்ளது தெரிந்ததே.

தூத்துக்குடியிலிருந்து வரும் கப்பல்கள் 80 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள காலித் துறைமுகத்துக்கே தற்போது அனுப்பப்படுகின்றன.

(இ-10)

நாளை

மார்கழி 6

சனிக்கிழமை

திதி: துவாதசி

பின் இரவு 1. 19 வரை.

நட்சத்திரம்: பரணி

முன் இரவு 6.59 வரை.

கரிநாள்

ராகுகாலம்: 9.25-10.55

சுபநேரம்: [illegible]-4.55

([illegible]

பழைய நேரப்படி)

அன்னை திரேசா குணமடைந்தார்

கல்கத்தா, டிச. 20

கடந்த 28 நாள்களாக இருதய நோய் காரணமாக கல்கத்தா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 86 வயது நிரம்பிய அன்னை திரேஸா சுகமடைந்து நேற்று கன்னியர் மடம் திரும்பினார்.

மருத்துவ மனையிலிருந்து வெளியேறும் போது அவர் நடந்தே சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

பயணிகள் கப்பல் சேவை

திருகோணமலை, டிச. 20

திருகோணமலையில் இருந்து பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளை இக்கப்பல் காங்கேசன் துறையில் இருந்து திருமலை நோக்கிப் புறப்படும். (இ-3)

ஆசிரிய கலாசாலை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், டிச. 20

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

புளுக்குணாவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சோழன் (முருகுப்பிள்ளை விவேகன்)— மட்டக்களப்பு, அனிதன் (குமார வடிவேல் மகாலிங்கம்)— மட்டக்களப்பு, பாலச்சந்திரன் (வேல்நாயகம் கிருஷ்ணராஜ்) — மட்டக்களப்பு, நரசிம்மன் (விஸ்வலிங்கம் நேசராசா) — மட்டக்களப்பு, சூரியகுமார் (கதிர்காமத்தம்பி சகாதேவன்) — மட்டக்களப்பு, வத்திரநாயகம் (அழகையா தேவலோஜிதன்) — மட்டக்களப்பு, கலாதரன் (ரஞ்சித் செல்வகுமார்)— அம்பாறை, சிவனேந்திரன் (புவனசிங்கம் புவனேந்திரன்)— அம்பாறை, தனகோபால் (கதிரேசன் ஜெகதீஸ்வரன்)—அம்பாறை, மனோதீபன் (கணபதிப்பிள்ளை சிவகுமார்)— மட்டக்களப்பு, நிமலேசன் (வேலாயுதம் திருத்தணி) — மட்டக்களப்பு, பவுத்திரன் (அழகுப்பொடி சிவராமலிங்கம்)— மட்டக்களப்பு, ரகுநாதன் (தம்பிராசா ஜெயக்குமார்) — மட்டக்களப்பு, தவமுரளி (ஆறுமுகம் மனோகரன்) — மட்டக்களப்பு, கவிராஜ் (கந்தையா சந்திரன்)— மட்டக்களப்பு, முத்துராமன் (நாகராசா குணசீலன்) — மட்டக்களப்பு;

இரண்டாம் லெப்டினன்ட்கள் புலித்தேவன் (அப்பு ஹாமி நேசராசா)— மட்டக்களப்பு, மஞ்சுதன் (சதாசிவம் சிங்கராசா) —மட்டக்களப்பு, மருதப்பன் (முருகுப்பிள்ளை சத்தியசீலன்) — மட்டக்களப்பு, கவிமுரளி (கோபால கிருஷ்ணன் சிவானந்தராசா) — அம்பாறை, குகதீஸ்வரன் (சுப்பிரமணியம் தில்லைநாதன்)மட்டக்களப்பு லெப்டினன்ட்கள் மதனகுரு [கணபதிப்பிள்ளை மதியழகன்]— மட்டக்களப்பு, காயவதனன் [கிருஷ்ணபிள்ளை வரதராசன்]— மட்டக்களப்பு, தென்னவன் [நாகமணி சுபேந்திரன்]— அம்பாறை மற்றும் கப்டன் முரசொலி அல்லது தினகரன் [வர்ணகுலசிங்கம் குமரரஞ்சன்]— மட்டக்களப்பு.

கைப்பற்றிய ஆயுதங்கள்

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் முகாம் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு முகாமும் முகாமிலிருந்த ஒரு பவள், ஒரு லாண்ட்றோவர், ஒரு டிரக் ஆகியவையும் தங்களால் அழிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

முகாமிலிருந்த படையினருக்கு உதவ வந்த படையணி மீதும் தாங்கள் தாக்குதல் நடத்தியதாகவும்—

அத்தாக்குதலின் போது ஒரு பவள் கவச வாகனம் அமுக்க வெடியில் சிக்கிப் பலத்த சேதமடைந்ததாகவும்—

முகாம் மீதான தாக்குதலில் ஐம்பது இராணுவத்தினர் வரை கொல்லப்பட்டதாகவும்—

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தாங்கள் கைப்பற்றிய ஆயுதங்களின் பட்டியலையும் அவர்கள் பகிரங்கப்படுத்தியிருக்கின்றனர். அவற்றின் விவரம் வருமாறு:-

85 எம். எம். ஆட்லறி — 01, 81 எம். எம். மோட்டார் — 01, 60 எம். எம். கொமாண்டோ மோட்டார் — 02, 60 எம். எம். மோட்டார் — 01, 40 எம். எம். பிஸ்டல் — 01, ஆம்ஸ்கோர் — 01, எல் 3, எல். எம். ஜீ — 05, பி. கே. எல். எம். ஜீ — 01, எ3, எல். எம். ஜீ —03, 81 எல். எம். ஜீ —03, கோல் கொமாண்டோ — 22, ரி56-1 ரைபிள் — 20, ரி. 56 2 ரைபிள் — 06, எம். 70 ரைபிள் — 08.

புறோணியம் பிஸ்டல் — 01, காஸ்கன் — 01, ஷொட் கண் — 02, றிப்பீற்றர் — 05, ஆட்லறி ஷெல் — 165, 81 எம். எம். மோட்டார் ஷெல் — 26, 60 எம். எம். ஷெல் — 95, 40 எம். எம். ஷெல் — 01, நேட்டோ ரவைகள் — 26 ஆயிரம், பி. கே. ரவை — 250, ஜி. 3 எல். எம். ஜி. லிங்குடன் ரவை — 2842, 81 எல். எம். ஜி. றம் மகஸின் — 04, 81 எம். எம். மோட்டார் பேஸ் பிளேட் — 01, அதற்குரிய பைவோர்ட் — 01, 60 எம். எம். பேஸ் பிளேட் — 01, அதற்குரிய பைவோர்ட் — 01, ஆயுத சீரோ செற் — 01, ஜி. 3 எல். எம். ஜிக்குரிய இரவுச் சாதனம் — 01, பி. கே. எல். எம். ஜி. பைவோர்ட் — 01, மகஸின் — 01, கோல் கொமாண்டோ மகஸின் 31, ஏ. கே. மகஸின் — 26.

5.56 ரக ரவைகள் — 34 ஆயிரத்து 460, ஐ. எம். ரவைகள் — ஒன்பதாயிரத்து 652, கூகர் செற் — 01, வோக்கி — 01, மொபைல் செற் — 01, பிஸ்டல் மகஸின் — 03, 584 மகஸின் — 05, 60 எம். எம். பூஸ்ரர் பெட்டி — 04, புகைக்குண்டு — 183, ஜே. ஆர். குண்டு — 03, புளட் புறூவ் ஜக்கெட் — 20, ஏ. கே. ஹோல்ஸர் — 08, கிளைமோர் —03, எக்ஸ்புளோடர் — 02, வோட்டர் பம் — 01, வயர் றோல் — 16, பைனாகுலர் — 03.

டிராக்டர் — 02, டிரக் — 02, காஸ் கண் ஷெல் —111, பராலைட் — 38, ஆர். பி. ஜி. ஷெல் — 08, ஆர். பி. ஜி. புறொப்லர் — 08.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலி

எமது சக மாணவன்
சி. கண்ணனின் தந்தையார்

திரு. ஆ.க. சிவஞானம்

அவர்கள் 18-12-96 அன்று இலண்டனில் இறை பதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

14 ஆம் அணி மாணவர்,
யாழ். மருத்துவபீடம்.

(44233)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி யோண்பிள்ளை ஜேட்றூட்

(நாரந்தனை வடமேற்கு கிராம அலுவலர்
திரு. யோ. பத்திநாதன்
அவர்களது தாயார்)

கடந்த 18 - 11 - 96 இல் இறைவனுடன் சங்கம மாகிவிட்ட அன்னாரது ஆன்ம சாந்திக்காக பிரார்த் திக்கின்றோம்.

உதவி அரச அதிபரும்
உத்தியோகத்தர்களும்.

உ. அ. அ. பணிமனை,
ஊர்காவற்றுறை. (44231)

65 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சின்னத்துரை சந்திரன்

தோற்றம்:	மறைவு:
01 — 07 — 1960	17 — 10 — 1996

எங்கள் குடும்பத்தின் தலைவனாக பாசமுடன் எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமாகிய அப்பாவே! உங்கள் அன்பையும் அரவணைப்பையும் எங்கள் உயிர் உள்ளவரை மறவோம்.

மனைவி, பிள்ளைகள்,
அம்மா, சகோதரர்கள்.

காளி கோயிலடி,
கொக்குவில் கிழக்கு. [9092]

கண்ணீர் அஞ்சலி

செல்வன்
அருந்தவராஜா கிருஷ்ணா

எமது பிரிவுத் தொண்டரும், உறுப்பினருமாக இருந்து தன்னலமற்ற சேவையாற்றி வந்த
செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா
அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத் துகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, வலி. வடக்குப் பிரிவு.

ஆலை ஒழுங்கை,
மல்லாகம். (9090)

கண்ணீர் அஞ்சலி

திரு. சி. வ. வைத்திலிங்கம்
(யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் உப தலைவர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர், யா/டிறிபேக் கல்லூரி, முன்னாள் கனிஷ்ட பிரிவு அதிபர்)

17-12-1996 இல் காலமான முன்னாள் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உப தலைவர் அமரர் சி. வ. வைத்திலிங்கம் அவர்களின் மறைவை யொட்டி துயரமடைந்திருக்கும் அவரது குடும்பத் தினருக்கும் கூட்டுறவாளருக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்து அவர்களின் துயரில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையும் பங்குகொள்கிறது.

- பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். ((சி/3764)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக் கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனத்தை உயர் நீதிமன்று ரத்துச் செய்தது!

உத்தரப் பிரதேசத்தில் வரலாற்று மிக்க தீர்ப்பு

அலஹாபாத், டிச. 20

உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி ஏற்பட வகை செய்த ஜனாதிபதியின் அறிவிப்பை அலஹாபாத் உயர் நீதிமன்றம் ரத்துச் செய்துவிட்டது.

நீதிபதிகள் பி. எம். லால், பிர்திஷ்குமார், மார்கண்டே ஹட்ஜோ ஆகிய மூவரும் இந்த வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தீர்ப்பை ஒருமனதாக வெளியிட்டனர்.

உத்தரப் பிரதேசத்தில் பிறப்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சியை நாடாளுமன்றம் ஊர்ஜிதம் செய்த செயலும் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று நீதி பதிகள் தெரிவித்தனர்.

இதற்கான உத்தரவு இம் மாதம் 26 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வருவதாக நீதிமன்றம் தெரிவித்தது.

இதற்கிடையில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஜனாதி பதி ஆட்சி பிறப்பிக்கப்பட்டது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று அலஹா பாத் உயர் நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளதால் ஐக்கிய முன் னணி அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி நேற்று கோரிக்கை விடுத்தது.

பாரதீய ஜனதாக்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன் றத்தின் இரு சபைகளிலும் இந்தப் பிரச்சினையை எழுப் பினார்கள்.

உத்தரப் பிரதேச மாநிலத் தில் மக்கள் அரசு ஒன்றை மீண்டும் ஏற்படுத்த உடனடி யாக நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அவர்கள் அர சாங்கத்திடம் கோரினார்கள்.

நேற்று நாடாளுமன்றம் கூடியவுடனேயே வாஜ்பாய் இந்த விடயத்தை லோக் சபாவில் எழுப்பினார்.

உத்தரப் பிரதேச மாநிலத் தில் ஜனாதிபதி ஆட்சியை பிறப்பிக்கக் கோரி அரசாங் கம் பரிந்துரைத்த போது அரசியல் சாசன ரீதியிலான ஷரத்துக்களை அரசு தவறா கப் பயன்படுத்தியது என்று பாரதீய ஜனதா குற்றஞ் சாட்டியது. (இ-10-3)

ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, டிச. 20

வாழைச்சேனை ஜெட்டி பொலீஸ் நிலையத்துக்கருகே ரெலோ உறுப்பினர் ஒரு வர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-5)

நாடாளுமன்ற ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காக காங்கிரஸ் நாடாளு மன்றக் குழு இன்று கூடுகின் றது.

நரசிம்மராவுக்கு எதிராக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந் ததே.

நேற்றுக் கூடிய கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 21 பேர் நரசிம்மராவ் ராஜினா மாச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். (இ-10)

தற்கொலைத் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட வெள்ளை நிற பஜ்ரோ ஒன்றும் பின்புற மாக கவச வாகனம் ஒன்றும் சென்று கொண்டிருந்தன.

கல்முனை தரவைப் பிள் ளையார் கோயிலுக்கு சமீப மாக இந்த வாகனத்தொடர் சென்று கொண்டிருந்த போது கோயிலுக்கு அருகில் உள்ள குறுக்குப் பாதை ஒன் றால் வந்த யமஹா 100 ரக மோட்டார் சைக்கிள் ஒன்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி சஹபந்து பயணம் செய்த பஜ்ரோ ஜீப்புடன் மோதி வெடித்தது.

தாக்குதல் நடத்திய தற் கொலைப் படையாளி யார் என்று இனம் காணமுடியாத அளவுக்கு அவரது உடல் சித றிப் போயிருந்தது. அவர் வந்து மோதிய மோட்டார் சைக்கிளும் சுக்கு நூறாகி இருந்தது.

பஜ்ரோ ஜீப்பில் மோட் டார் சைக்கிள் மோதிய போது எழுந்த வெடிச் சத் தம் 5 மைல் தூரம் கேட்ட தாக அப்பகுதி மக்கள் தெரி வித்தனர்.

அதேசமயம் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி உபாலி சஹபந்து கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக இருந்தனவா என்பதை கண் டறிய விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. (இ)

பாடும்மீன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையின் பயனாக, விடுதலைப் புலிகளின் கிழக்குத் தலைமை யகம் உட்பட ஆறு பெரிய முகாம்களை இராணுவத்தி னர் கைப்பற்றி விட்டதாக வும் —

அதன் பயனாக இருமுனை களில் படையினர் முன்னேறி யதால் விடுதலைப் புலிக ளைக் காட்டுக்குள் துரத்த முடிந்ததாகவும் —

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்திருக் கிறார். (அ-இ-10)

பங்களாதேஷில் கைதிகள் கிளர்ச்சி

காவலர்கள் சிறைப்பிடிப்பு

பங்களாதேஷ் யசூர் சிறையிலுள்ள சுமார் 2,700 கைதிகள், சிறைச்சாலையைக் கைப்பற்றி சிறைப் பாதுகாவ லர்கள் அனைவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்துள் ளனர்.

சிறைக் கலவரத்தை அடக்க இராணுவம் முழுத் தயார் நிலையில் சிறைக்கு வெளியே நிற்பதாகவும் —

எந்த நேரத்திலும் சிறைக்குள் இராணுவம் நுழைக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

ரஷ்யாவுக்கு உளவு பார்த்த அமெரிக்க அதிகாரி கைது!

வாஷிங்டன், டிச. 20

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒரு வர் ரஷ்யாவுக்காக வேவு பார்த்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதான ஏன்செட் என்னும் அவர் புலனாய்வுத் துறையின் சிறப்பு அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

1977 — 1992 காலகட்டத்தில் சோவியத் யூனிய னுக்கும், பின்னர் ரஷ்யாவுக்கும் அதிஇரகசிய பாதுகாப்புத் துறைத் தகவல்களை வழங்கியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இ-10)

C. S. I. CHURCH, UDUVIL
REVD. ELIYATHAMBY MEMORIAL NURSERY

Wanted qualified **Nursery Teacher** (Christian) with the knowledge of Eastern & Western Music Apply - on or before **27 th Dec. 1996**. The above Nursery will Reopen on the **6 th Jan. 1997.**

REV. V. RAJKUMAR,
Pastor, C. S. I., Uduvil,
Parsonage Uduvil.

(44234)

மரண அறிவித்தல்

இராமலிங்கம் வேலுப்பிள்ளை

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் தற்போது மல் லாவியில் வசித்தவருமான இராமலிங்கம் வேலுப் பிள்ளை 7-12-96 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் சவுந்தரியின் அன்புக் கணவரும், நடராசா, தவமலர், தவக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவமணிதேவி, உலகேஸ்வரன் ஆகியோ ரின் மாமனாரும், சுகந்தன், சுகன்யா, கபிலன், கௌசி கன், சுதர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-12-96 இல் மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
உலகேஸ்வரன்
(மருமகன்)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (9096)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org